மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இது சம்பந்தமாக 33 பேர்கள் மீது போலீசார் வழக்கு தொடுத்தனர். அவற்றில் 19 பேர்கள் மீது குற்றம் ருசுவாக்கப் படவில்லை. மீதி 14 பேர்களில் 2 பேர்கள் மீது சிறுசிறு வழக்குகள் (petty cases) தொடரப்பட்டன. அதில் ஒருவருக்கு ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டது. மற்றொருவர் கோர்ட்டாரால் விடுதலை செய்யப்பட்டார். மீதியுள்ள 12 பேர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் இவர்கள் 12 பேரும் விடுதலை செய்யப் பட்டனர்.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, சிவகாசி பொதுக்கூட்டத்தில் உணர்ச்சியைத் தூண்டும் அளவுக்குப் பேசியதாகத் தெரிகிறது. அப்படிப் பேசிய பேச்சாளர் யார்? கல் எறியும் அளவிற்கு அங்கே என்ன பேசப்பட்டு அந்த சூழ்நிலை உருவாயிற்று ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேசிய பேச்சாளர் பெயர் விவேகி தான். ஆனால் அவர் பேசிய பேச்சு என்னவென்றால், "அண்ணாதுரை, ஈ.வே.ரா. பெரியாரிடம் ரூ. 40 சம்பளத்துக்குச் செருப்பைத் தூக்கி, எச்சில் தட்டைக் கழுவ வேலை பார்த்து வந்த பயல் இன்றைக்கு முதல் மந்திரி, அந்தக் காலத்து சமஸ்தான வித்துவான்கள், குட்டி ராஜாக்கள் எல்லாம் நாட்டைவிட்டு சொத்துக்களை இழந்து அவர்கள் பெண்டாட்டிகள் எல்லாம் ஆப்பக்காரிகளாகவும், இட்லிகாரிகளாகவும் ரோட்டில் திரிகிறார்களே ; இன்றைய இந்த அண்ணாதுரைக்கு முதல் மந்திரி பதவி போனால் அவர் பெண்டாட்டி இட்லி சுட்டு விற்பாளா ? கருணாநிதி பயல், நெடுஞ்செழியன் பயல், தறுதலைப்பயல்கள். எல்லாம் மந்திரியாக வந்துவிட்டு கொள்ளை அடிக்கிறார்கள். லட்சம் லட்சமாக சேர்க்கிறார்கள்". இதுதான் அங்கே பேசப்பட்ட கண்ணியமான பேச்சு.

National flag.

* 109 Q.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Public Works Minister (present Chief Minister) declared during his speech at Madurai recently, that action will be taken against those who burn the National Flag; and

(b) if so, the number of such crimes filed during the months of April, May and June 1968?

தேசியக்கொடி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் மதுரையில் பொதுப்பணி அமைச்சர் (தற்போதைய முதலமைச்சர்) அவர்கள் பேசும்பொழுது தேசிய கொடியை எரிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியது உண்மையா ?

[4th March 1969

(இ) ஆமெனில், 1968 ஏப்ரல், மே, ஜுன் திங்களில் எத்தனை குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) ஒரே ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன்: பதிவு செய்யப்பட்ட வழக்கின் முடிவு என்ன என்று கூறமுடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்தக் குற்றவாளிகளுக்கு ரூ. 50 நீதிமன்றத்தில் அபராதம் விதிக்கப்பட்டது.

Allotment of paddy to Madurai.

*111 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether 40 thousand bags of paddy were allotted to Madurai from Thanjavur; and

(b) whether rice mill owners complained that in the majority of the bags, paddy has germinated to a height of 2½ inches?

மதுரைக்கு ஒதுக்கப்பட்ட நெல்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சையிலிருந்து மதுரைக்கு 40 ஆயிரம் மூட்டை நெல் ஒதுக்கப்பட்டதா?

(இ) அதில் பெரும்பாலான மூட்டைகளில் 2½ அங்குல நெற் பயிர் முளைத்து விட்டது என அரிசி ஆலை சொந்தக்காரர்கள் புகார் செய்தார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) தஞ்சையிலிருந்து மதுரை மாவட்டத்திற்கு 40,000 டன் அரிசிக்குள்ள நெல் சென்ற குறுவை அறுவடையிலிருந்து ஒதுக்கப்பட்டது. அதில் சுமார் 22,000 டன் 1—10—1967-லிருந்து 31—12—1967 முடிய மதுரை மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(இ) அதில் பெரும்பாலான மூட்டைகளில் 2½ அங்குல நெற் பயிர் முளைத்து விட்டது என்று அரிசி ஆலை சொந்தக்காரர்கள் புகார் செய்யவில்லை. ஏ.டி.டி. 27 நெல் ஈரமாக இருப்பதாகவும், சில மூட்டைகளில் நெல் முளைத்திருப்பதாகவும் பதர் அதிகமாக இருப்பதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, வளர்ந்த பயிரின் அளவு 2½ அங்குலம் அல்லது குறைவாக 2¼ அங்குல மாகக்கூட இருந்திருக்கலாம். அப்படி எவ்வளவு நெல் கெட்டு விட்டது ? அதனால் சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: குறுவைப் பயிர் மழை காலத்தில் அறுவடையானது. அவசர அவசரமாக வெளி மாவட்